# அரசுத் தேர்வுகள் துறை,
# சென்னை - 600 006

**இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு,**

**ஏப்ரல் 2012**

**செய்முறைத் தேர்வுக்கான அறிவுரைகள்**

<u>அரசுத் தேர்வுத் துறை, சென்னை - 600 006</u>

<u>இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு, ஏப்ரல் 2012</u>

<u>செய்முறைத் தேர்வு</u>

தமிழக அரசு, 2011-2012ஆம் கல்வி ஆண்டு முதல் சமச்சீர் பொதுப்பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளதால், அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி, அறிவியல் பாடத்தில் கருத்தியல் தேர்விற்கு 75 மதிப்பெண்களும் செய்முறை தேர்விற்கு 25 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

<u>இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் செய்முறை தேர்வு கீழ்கண்டவாறு அமையும் :</u>

அறிவியல் பாடத்தில் செய்முறை தேர்விற்கு 2 ½ மணி நேரம்

| பாட குறியீடு எண் | செய்முறைப் பாடம் | காலம் |
|---|---|---|
| 08 | இயல் அறிவியல் (Physical Science) | 1 ¼ மணி நேரம் |
| 10 | உயிர் அறிவியல் (Biological Science) | 1 ¼ மணி நேரம் |

செய்முறைத் தேர்வு காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரு வேளைகளில் நடத்தப்படும்.

<u>செய்முறைத் தேர்வு வினாக்கள் மற்றும் மதிப்பெண்கள்</u>

செய்முறைக்கென பாடப்புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள கையேட்டிலுள்ள ஆய்வுகளில்

<u>இயல் அறிவியலில்</u> :

இயற்பியல் - ஒரு வினா - 5 மதிப்பெண்
வேதியியல் - ஒரு வினா - 5 மதிப்பெண்
= 2 வினா
மொத்தம் 10 மதிப்பெண்கள்

<u>உயிர் அறிவியலில்</u> :

தாவரவியல் - ஒரு வினா - 5 மதிப்பெண்
விலங்கியல் - ஒரு வினா - 5 மதிப்பெண்
= 2 வினா
மொத்தம் 10 மதிப்பெண்கள்

..2

388-91[illegible]

www.kalvisolai.com - 2 of 6.

என மொத்தம் 20 மதிப்பெண்களுக்கு விடையளிக்க வேண்டும். விடை அளிக்க வேண்டிய வினாக்களை மாணவர்களாகவே, செய்முறை ஆய்வு கையேடில் உள்ள தொகுப்பிலிருந்து மந்தண முறையில், குலுக்கல் (Lot System) முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். கணக்கீடு வினாக்களுக்கு ஒரு கணக்கீடு (Single Reading) எடுத்தால் போதுமானது.

அகமதிப்பீடு :

| | |
|---|---|
| மாணவர்கள் ஆய்வுக் கூட வருகை | - 1 மதிப்பெண் |
| மாணவர் ஆய்வக செயல்திறன் | - 1 மதிப்பெண் |
| மாணவர் ஆய்வக ஈடுபாடு | - 1 மதிப்பெண் |
| ஆய்வக பதிவுக் குறிப்பேடு | - 2 மதிப்பெண்கள் |
| மொத்தம் | 5 மதிப்பெண்கள் |

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் - கருத்தியல் தேர்வில் 75 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்களும் மற்றும் செய்முறை தேர்வில் 25 மதிப்பெண்களில் 15 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மாற்றுத் திறனுடைய மாணவர்கள் சொல்வதை எழுதுபவர் (Scribe) பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது மாற்றுத் திறனுடைய மாணவர்கள் விரும்பினால் கருத்தியல் தேர்வில் 75 மதிப்பெண்களுக்கு மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை 100-க்கு மாற்றி வேறுபாட்டை செய்முறை மதிப்பெண்ணாக கொள்ளலாம்.

<u>செய்முறைத் தேர்வுகள் நடத்துவது குறித்து தலைமைக் கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் புறத் தேர்வாளர்கள் ஆகியோர்களுக்கு அறிவுரைகள் :</u>

தலைமைக் கண்காணிப்பாளர் :

செய்முறைத் தேர்வு நடத்தப்படும் பள்ளியின் தலைமை ஆசிரியர் / முதல்வர் அந்த செய்முறைத் தேர்வு மையத்தின் தலைமைக் கண்காணிப்பாளராக செயல்படுவார். தலைமைக் கண்காணிப்பாளர் செய்முறைத் தேர்வுகளை நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளை செய்வதுடன், செய்முறைத் தேர்வினை செம்மையாகவும் எவ்வித புகார்கள் இன்றியும் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். செய்முறைத் தேர்விற்குத் தேவையான சோதனைக்கூட பொருட்களையும் வாங்கி வைத்திடல் வேண்டும்.

தேர்வர்கள் அனைவருக்கும், அவர்கள் செய்முறை செய்வதற்கான குழு, தேதி, வேளை மற்றும் பாடம் ஆகிய விவரங்களை தேர்வு தொடங்குவதற்கு முன்னரே அறிவித்திட வேண்டும். இப்பணியில் தலைமைக் கண்காணிப்பாளர்களே தனிக்கவனம் செலுத்தி செய்முறைத் தேர்விற்கான கால அட்டவணையினை அனைத்து தேர்வர்களுக்கும் அறிவித்து எவ்வித புகார்களும் எழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

..3

செய்முறைத் தேர்வு நடைபெறும் ஒவ்வொரு நாளிலும், சம்பந்தப்பட்ட பாட ஆசிரியரால் பூர்த்தி செய்யப்பட்ட அக மதிப்பெண்கள் கொண்ட மதிப்பெண் தாட்களைப் புறத் தேர்வாளரிடம் ஒப்படைக்க வேண்டும். தேர்வு முடிவடைந்த பின்னர், புறத் தேர்வாளரால் ஒப்படைக்கப்படும் அரக்கு முத்திரையுடன் கூடிய மதிப்பெண் தாட்கள் கொண்ட உறையின்மேல் பாடம், நாள், வேளை (Session), குழு ஆகிய விவரங்கள் எழுதி அலமாரியில் பூட்டி வைக்கவேண்டும். அதேபோன்று, செய்முறை விடைத் தாட்களையும் கட்டி, அரக்கு முத்திரையிட்டு அலமாரியில் பூட்டி வைக்கவேண்டும். இதற்கென தனியாக ஒரு அலமாரியை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். செய்முறைத் தேர்வுகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர், மதிப்பெண் பட்டியல்கள் கொண்ட உறைகளை பாடவாரியாகப் பிரித்து ஒருசேரக் கட்டி துணிப்பையில் இட்டு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். அதேபோன்று, அனைத்து விடைத் தாட்களையும் கட்டி, அதனுடன் சம்பந்தப்பட்ட வினா பட்டியல்களையும் கட்டி சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். செய்முறைத் தேர்வு செய்தவர்களின் பதிவெண் கொண்ட பட்டியலையும் செய்முறைத் தேர்விற்கு வருகை தராதவர்களின் பதிவெண்கள் கொண்ட பட்டியலையும் நாள் வாரியாக தனித்தனியே தயாரித்து ஒரு நகலை மதிப்பெண் பட்டியலுடனும், ஒரு நகலை விடைத் தாளுடனும் அனுப்பவேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து மதிப்பெண் பட்டியல்களுடன் அனுப்புதல் வேண்டும். செய்முறைத் தேர்வுகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர், செய்முறைத் தேர்விற்கு வருகை தராதவர்களின் பதிவெண்களை பாட வாரியாக குறிப்பிட்டு, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநரின் (பணியாளர்), சென்னை-600 006 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

செய்முறைத் தேர்விற்கான வினாத்தாட்கள் :

செய்முறைத் தேர்விற்கான வினாக்களை குறிப்பிட்டு அனுப்புவதற்கு ஏதுவாக ஒவ்வொரு செய்முறைத் தேர்வு மையத்தின் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள், தங்கள் பள்ளியில் வருகை தரவிருக்கும் மாணவர்களை குழுக்களாக பிரித்து, குழுவாரியாக நான்கு பாடங்களுக்கு தனித்தனி பெயர்ப் பட்டியல் தயாரித்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி அப்பட்டியலில் சம்பந்தப்பட்ட பாடத்துக்குரிய வினா வங்கியிலிருந்து தேர்வர்களுக்கு உரிய வினாவினை தேர்வு செய்து அதற்குரிய எண்ணை வழங்கிடல் வேண்டும். வினாக்கள் கொண்ட உறைகளை துறை அலுவலர் கொண்டு வருவார்.

புறத் தேர்வாளர் :

புறத்தேர்வாளர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்படுவார். பாண்டிச்சேரியை பொறுத்தவரை புறத்தேர்வாளர், பாண்டிச்சேரி, முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்படுவார்கள். புறத்தேர்வாளர்கள் அவரவருக்குரிய தேர்வு மையத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே சென்றடைய வேண்டும். இவர்கள் துறை அலுவலரால் ஒப்படைக்கப்பட்ட வினாக்கள் கொண்ட உறையினை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக 15 நிமிடங்கள் முன்னர் பிரிக்க வேண்டும். அதில் கண்டுள்ளவாறு தேர்வர்களுக்கு செய்முறை வினாக்களை வழங்கிட வேண்டும். பதிவெண் கொண்ட பெயர்ப் பட்டியல் பெறுவதற்கு முன்னரே இந்த உறையிலுள்ள பட்டியல் தயாரிக்கப்பட்டதால் அதில் பதிவெண் கலம் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும். எனவே, உறையை பிரித்து பட்டியலை எடுத்தவுடன், ஒவ்வொரு தேர்வருக்கும், அவருக்குண்டான பதிவெண்ணை எழுதிடவேண்டும். இதன் பொருட்டு இணைப்புப் பள்ளிகளின் பெயர்ப் பட்டியலின் ஒரு நகலை அப்பள்ளியிலிருந்து பெற்றிட வேண்டும். இத்துறையால் பதிவெண் வழங்கப்படாத தேர்வர்களின் பெயர் அப்பட்டியலில் இருந்தால் அவர்கள் பெயரை நீக்கம் செய்துவிட்டு, அவர்களை செய்முறைத் தேர்விற்கு அனுமதிக்கக்கூடாது.

www.kalvisolai.com - 4 of 6.

மேலும், இத்துறையால் பதிவெண்கள் வழங்கப்பட்ட தேர்வர்களின் பெயர்கள், பட்டியலில் இடம்பெறாமல் இருந்தால், அவர்களுடைய பட்டியலை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி, அவரால் வினா எண்கள் குறிக்கப்பட்டு பெறப்படவேண்டும்.

பட்டியலில் செய்முறை வினா எண் மட்டும் குறிக்கப்பட்டிருக்கும். இந்த எண் 2012 ஆம் ஆண்டு (2011–2012 கல்வியாண்டு முதல்) அனைத்து பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள செய்முறை ஆய்வு கையேட்டில் உள்ள தொகுப்பிலுள்ள வினா எண்ணை குறிப்பதாகும். எனவே, கையேடு நகலை செய்முறை தேர்வு நாட்களில் தினமும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கீழ்க்காண் பாடவாரியான அறிவுரைகளை தவறாது கண்டிப்பாக கடைபிடிக்கவேண்டும்.

<u>மதிப்பெண் பட்டியல் தயாரித்தல்</u> :

வெற்று (Blank) மதிப்பெண் பட்டியல்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. செய்முறைத் தேர்விற்கு வேண்டிய வெற்று விடைத்தாட்களை சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். புறத்தேர்வாளர் ஒவ்வொரு தேர்வரின் செய்முறை விடைத்தாளினை மதிப்பீடு செய்து அன்னாருக்கு செய்முறைத் தேர்வில் வழங்கப்பட்டுள்ள மதிப்பெண்ணை விடைத்தாளின் முகப்பு பக்கத்தில் எழுதிட வேண்டும்.

அறிவியல் பாட செய்முறைத்தாள் ஒன்றிலுள்ள இயற்பியல் மற்றும் வேதியியல் பகுதிகளில் தேர்வர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள அக மதிப்பீடு மற்றும் புற மதிப்பீடு ஆகிய மதிப்பெண்களை தனித்தனியே கூட்டி பாட குறியீடு <u>எண் 08</u> குறிப்பிட்டு மதிப்பெண் பட்டியலில் பூர்த்தி செய்தல் வேண்டும். அதே போன்று செய்முறைத்தாள் இரண்டின் பகுதிகளான தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகியவைகளில் ஒவ்வொரு தேர்வருக்கும் வழங்கப்பட்டுள்ள அக மதிப்பீடு மற்றும் புற மதிப்பீடு மதிப்பெண்களை தனித்தனியே கூட்டி மதிப்பெண் பட்டியலில் பாட குறியீடு <u>எண் 10</u> எனக் குறிப்பிட்டு பூர்த்தி செய்தல் வேண்டும்.

செய்முறைத் தேர்வு ஆரம்பிக்கும் நாள் முன்னரே, பெயர் பட்டியல் பெறப்பட்டவுடன், மதிப்பெண் பட்டியலில் அக மதிப்பெண்களை சம்பந்தப்பட்ட பாட ஆசிரியரால் பூர்த்தி செய்யப்பட்டு, மதிப்பெண் பட்டியலை தேர்வு மைய தலைமைக் கண்காணிப்பாளர் பெற்றிடவேண்டும். இதனை சரிபார்த்து, தலைமைக் கண்காணிப்பாளரும் தனது கையொப்பத்தை இடவேண்டும். பின்னர் புறத்தேர்வுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களுக்கு மாணவர்கள் பெறும் மதிப்பெண்களை மதிப்பெண் தாளில் புறத்தேர்வாளர்களால் மந்தண முறையில் பதிவு செய்யப்பட்டு அந்தந்த மாணவருக்கான மொத்த மதிப்பெண்கள் பதியப்பட்டு பின்னர் மதிப்பெண் தாட்கள் உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு அந்தந்த மைய தலைமைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். செய்முறைத் தேர்வு விடைத்தாட்களையும் கட்டி, அரக்கு முத்திரையிட்டு தலைமைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

..5

www.kalvisolai.com - 5 of 6.

<u>துறை அலுவலர்</u> :

துறை அலுவலர் தேர்வு தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், தேர்வு மையத்திற்கு சென்று, ஒவ்வொரு நாளும் செய்முறைத் தேர்வு செய்யவுள்ள தேர்வர்களின் விபரங்களை அறிந்து, **அதன்படி** வினாக்கள் கொண்ட உறைகளை நாள்தோறும் கொண்டு செல்ல முன்னேற்பாடுகள் செய்தல் வேண்டும். தேர்வு நடைபெறும் ஒவ்வொரு நாளிலும் தேர்வு நேரத்திற்கு ஒரு மணிநேரம் முன்னதாக தேர்வு மையத்தில் இருக்க வேண்டும். **அன்றைக்குண்டான** இரண்டு வேளையில் (2 Sessions) உறைகளை தலைமைக் **கண்காணிப்பாளரிடம்** ஒப்படைத்து உறையின் மேல் உள்ள விவரங்களும், அன்றைக்கு தேர்வுக்கு வரவுள்ள தேர்வர்களும் ஒத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இங்கு கூறப்பட்டுள்ள **அனைத்து** அறிவுரைகளையும் தலைமைக் கண்காணிப்பாளர் மற்றும் புறத் தேர்வாளர் ஆகியோர் பின்பற்றுகின்றனர் என்பதை உறுதி செய்ய வேண்டும். மையத்தில் செய்முறைத் தேர்வு எவ்வித புகாருமின்றியும் ஒழுங்கீனச் செயலுமின்றியும் **செம்மையாக**, திறம்பட நடைபெறுவதற்கு துறை அலுவலரே முழுப்பொறுப்பாவார்.

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 600 006